முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் வரரிஷி அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

09.06.2019, ஞாயிற்றுக்கிழமை

1. **யோகமும் தருமமும் தயவாய் மாற்றி**
**உலகோரை நல்ல மனிதர்களாக்க**
**வகைபட ஞான சக்தியாக**
**வடிவேலனாக வந்து அருளும்**
2. அருளும் அரங்கன் பெருமை கூறி
அறிவிப்பேன் நித்ய பிரசன்ன ஆசி
பொருள்பட விகாரி விடை திங்கள்
பிசகில்லா இருபானாற் திகதி கதிர் வாரம்
(விகாரி வருடம் வைகாசி மாதம் 26ம் நாள் 09.06.2019, ஞாயிற்றுக்கிழமை)
3. வாரமதில் வரரிஷி யானும்
வழங்குவேன் உலகோர் நலம் பெற
பாரதம் தொட்டு ஞானிகள் ஆட்சி
பழுதில்லா நிகழ இருக்கவே
4. இருக்கவே கலிவாழ் மக்களே
இனியும் காலம் கடத்தா
கருத்தாக அரங்கன் குடிலில்
கட்டாயம் அன்பர்கள் வந்து கலந்து
5. கலந்துமே அரங்கன் தலைமை
கனிவுபட மக்கள் ஏற்றுமே
கலந்து சேவை ஆற்றி வர
கண்டுரைக்க தீட்சை ஏற்று
6. ஏற்றுமே அன்னதானம் தொடர
எல்லா திக்கும் பரவிட செய்து
உற்றதொரு எளிய வழியாக
உயர் ஆசான் கூறும் கொள்கை
7. கொள்கைதனை மக்களெல்லாம்
குரு உத்தரவாக எண்ணி
வல்லமைபட பின்பற்றியே
வணங்கிவர மாற்றம் காணும்
8. காண்கவே புண்ணிய பூமி
கந்தன் ஆளுமை நிறைந்த
உண்மை ஆன்மீக பூமி
உயர் ஆசான் அரங்கன் வாழும்
9. வாழும் துறையூர் மண்ணாகும்
வல்லமைமிக்க புவி தன்னை
காலமதில் அணுகி வணங்கி
கட்டாயத் தொடர்பாக இணைந்து

10. இணைந்து முழுமதி பூசையோடு
இணையிலா நடத்தும் திருவிளக்கு
இணையிலா அன்னதான சேவை
எல்லா பூசைகளிலும் கலந்து

11. கலந்து மக்கள் தொடர
கந்தா முருகா அரங்கா என
வலம் வர செபதபம் தொடர
வையகம் ஞானபூமி ஆகும் நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் வரரிஷி அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

மக்கள் ஞானம்பெற யேதுவாய் யோகத்தையும் தருமத்தினையும் தயவாக மாற்றி உலக மக்களுக்கு அளித்து உலகோர் ஞானவான்களாக ஆகிடவே, முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்து அவர்களை வழிநடத்திக் காக்கின்ற மகா ஞானகுருவே ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானயோகியே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலன் கருதி விகாரி வருடம் வைகாசி மாதம் **26**ம் நாள் **09.06.2019**, ஞாயிற்றுக்கிழமையான இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே வரரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் வரரிஷி.

இவ்வுலகினில் நிலவும் கலியுகத்தின் துன்பம் எல்லாம் மறைய இருக்கின்றது. பாரத தேசம் முதலாக தொடங்கி குறைவின்றி உலகமெங்கும் கலியுகம் மாறி ஞானயுகமாக யுகமாற்றம் அடைய போகின்றதப்பா. ஆதலினால் கலியுகத்தினில் வாழும் கலியுக மக்களே இனி மேலாகினும் காலம் கடத்தாமல் உலக மாற்ற மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகர் வாழும் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலினை பயபக்தியுடன் வந்து வணங்கி அரங்கமகா தேசிகனாரிடத்து ஆசி பெற்று அன்பர்களாக ஆகி ஆறுமுக அரங்கமகானின் சீரிய தலைமையை ஏற்று அரங்கர் திருவடி பணிந்து தொண்டுகளைச் செய்தும், அரங்கர் திருப்பணிகளுக்கு பொருளுதவிகள் செய்தும், தர்மங்கள் செய்தும், அரங்கரின் புகழினை உலகமெலாம் பரப்பியும் சேவையாற்றி வாருங்கள்.

ஆறுமுக அரங்கமகானின் திருவடி பற்றி அரங்கரிடத்து தீட்சை உபதேசம்தனை அடைந்து அரங்கரின் அன்னதானத்தினை உலகின் பல திசைகளிலும் பரவிடச் செய்து உலக மக்களிடத்து எளிய தூய உண்மை நெறியான அரங்கரின் தூய ஞானநெறிக் கொள்கைகளை எடுத்துக் கூறி மக்களெல்லாம் அரங்கரின் கொள்கைகளை குரு உத்திரவாக ஏற்றுக் கொள்ளும்படி செய்திடுங்கள்.

உலக மக்களெல்லாம் தர்மங்களைச் செய்து அரங்கரின் கொள்கைகளை உத்திரவாக ஏற்று வழுவாது கடைப்பிடித்து வந்திட ஞானிகளை வணங்கி வர, உலகில் பெரும் நல்மாற்றங்கள் விரைந்து உண்டாகிடும்.

உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனார் வாழும் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடில் முருகப்பெருமானின் ஆளுமை மிகுந்து நிற்கும், புண்ணிய பூமியாகும் ஞானபீடமாகும். உண்மை ஆன்மீகம் நிறைந்ததும் உலகிற்கு உண்மை ஆன்மீகத்தை போதிக்கும் வல்லமைமிக்க ஞானபீடமாகும். ஆகவே வல்லமைமிக்க ஆசான் அரங்கன் வாழும் துறையூரினை உலக மக்களெல்லாம் விரைந்து வந்து ஓங்காரக்குடிலை பயபக்தியுடன் நாடிச் சென்று அரங்கப்பெருமானை முழுமனதாய் நம்பிக்கையோடு உளமார தரிசனம் செய்து பணிந்து வணங்கி அரங்கர் ஆற்றும் தானதருமப் பணிகளிலே கலந்து ஏழாம் படை வீட்டின் தொடர்பினில் இருந்திட வேண்டுமப்பா.

ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலில் உலக நலன் கருதி ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி தினத்தினிலே நடத்துகின்ற ஞானிகள் சிறப்பு பூஜைகளிலே கலந்து கொண்டு ஈடு இணையில்லா அன்னதான பணிகளை செய்து தருமங்களை ஏற்று தொடர்ந்திடுவதோடு கந்தா, முருகா, அரங்கா காப்பாய் எங்களை என்றே மனம் உருகி பிரார்த்தனைகள் செய்து குடிலதனை ஜெபதபங்களோடு வலம் வந்து பக்தி செய்திட இந்த உலகமே ஞானஉலகமாக ஆகிடும் எனக் கூறுகிறார் மகான் வரரிஷி.

–சுபம்–